www.tamilarangam.net

விடுதலை 22-12-83.

22.12.83 விடுதலை

# சிங்களத்தைக் கிடுகிடுக்க வைத்த தமிழீழ விடுதலை மாநாடு

[ஈழத்தில் "சுதந்திரன்" வார ஏட்டைத் துவக்கி -விடுதலை இயக்கத்தை வீறுபெறச்செய்த மிகச் சிறந்த பத்திரிகையாளர் கோவை மகேசன்சிங்கள அரசின் சிறைக் கொட்டடியிலே அடைக்கப்பட்டவர்; வெளிக்கடைச்சிறையிலே- 52 ஈழவிடுதலைப் போராளிகளை சிங்களராணுவம் ஈவிரக்கம் இன்றி கொன்று குவித்தபோது-இவரும் அதே சிறையில் தான் இருந்தார்; சிறைக்குள்ளேயே- சிங்களவெறியர்களை எதிர்த்துப் போரிட்டு-உயிர்தப்பிய அவர் - அண்மையில் தமிழகம் வந்து சேர்ந்தார்;

மதுரை ஈழவிடுதலை மாநாட்டில் பங்கேற்ற அவர்-மாநாட்டைப்பற்றி எழுதியிருக்கும் இந்த மனம் திறந்த விமர்சனத்தை-விடுதலை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறது.]

தன கணவன் அநியாயமாகக் கொலையுண்டான் என்று அறிந்ததும், 'மெய்யிற்பொடியும் விரிந்த கருங்குழலும் கையிற் தனிச்சிலம்பும் கண்ணீருமாகத் தோன்றி பாண்டியன் அவைக்களத்திலே நீதி கேட்டு மதுரை மாநகரையே எரியூட்டினாள் கண்ணகி என்று சிலப்பதிகாரம் பேசுகிறது-"

தான் தவறிழைத்து விட்டதையறிந்த தமிழ்மன்னன் பாண்டியன் நெடுஞ்செழியன் "யானோ அரசன் யானே கள்வன்- என் முதற்பிழைத்தது தென்புலங் காவல்" என்று அரியணையிலிருந்து வீழ்ந்திறந்து தனது நீதியை நிலைநாட்டினான் அன்று! அநீதியே நீதியாக அமைந்துவிட்டது ஜெயவர்த்தனே அரசில் இன்று!!

இன்று பல்லாயிரக்கணக்கான தமிழச்சிகள் தமிழ் ஈழத்திலே சிங்களப்படையின் கொலைவெறிக் குரூரத்தினால் தங்கணவரை இழந்து பொட்டிழந்து பூவிழந்து கற்பையே இழந்து கதறித்துடிக்கும் ஒலி பதினெட்டு மைலுக்கு அப்பாலிருந்து எழுந்தபடியே இருக்கிறது!

சொந்த நாட்டிலேயே பாதுகாப்பின்றி கண்ட இடமெல்லாம் தமிழர் குருதியில் நீச்சலடிக்கிறது சிங்களம் எனும் மிருக வெறிக்கூட்டம்!

## பெரும்புரட்சிக்கு வித்து

வாழ்வா சாவா ஒரு கை பார்த்துவிடுவோம்எங்கள் ஈழத் தமிழ் நாட்டை மீட்டே தீருவோம் என்று களத்தில் நின்று கொண்டிருக்கின்றனர் எமது இளைஞர்கள்-தமிழீழ விடுதலைப் புலிகள்-தம்பி பிரபாகரன் தலைமையிலே!

பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொலை செய்யப்பட்ட அந்த இரத்த ஆறு ஓடிக் கொண்டிருக்கும் போதே-பல நூறு விடுதலைப் போராளிகளின் பிணத்தின் மீது ஏறிச் சென்று 'பேச்சுவார்த்தை' என்ற ஏமாற்று நாடகம் அரங்கேற்றப்படவுள்ள வேளையிலே-



மதுரை மூதூரில் தமிழர்களின் இனமானம் காத்து தமிழீழ விடுதலைப்போருக்கு எல்லா வகையிலும் வெளிப்படையாக ஆதரவு தரும் தந்தை பெரியார் உருவாக்கிய திராவிடர் கழகம் நடத்திய தமிழீழ விடுதலை மாநாடு ஒரு பெரும் புரட்சிக்கு புத்துணர்வுக்கு - சலனப்பட்ட மனங்களையெல்லாம் சரியான திசையில் பார்வையைச் செலுத்துவதற்கு-வித்திட்டு விட்டது!

தமிழீழவிடுதலைக்கு ஒரேயொரு மாற்றுத்திட்டம் தமிழீழ விடுதலையே தவிர வேறு எதுவுமேயில்லை என்று அறிவித்துவிட்டது தமிழ்நாட்டை மட்டுமல்ல-அகில இந்தியாவையுமே அதிர வைத்துவிட்டது திராவிடர் கழகத்தின் மாநாடு!

'<u>பெருந்தன்மையாற் கெட்ட பேயனுக்கு பேர் தமிழன்</u>' என்று கவிஞர் கூறியதுபோல சிங்களவல்லாட்சியின் கொலைவெறி தொடரும்போதே 'பேச்சுவார்த்தை' இராகம், தாளம், பல்லவி பாடப் புறப்பட்ட அத்தகைய எண்ணங்களை அடி மனதிலே கொண்டிருந்தவர்களையெல்லாம் ஆட்டம் காண வைத்துவிட்டது மதுரை மாநாடு!

சிங்களத்துக்கு எதிரான செந்தமிழர் படையெடுப்போ இஃது எனக் கலங்கும்படி செய்துவிட்ட ஒரு இலட்சத்துக்குமேற்பட்ட தமிழர்களின் ஊர்வல மாட்சியையும், அங்கு எழுப்பப்பட்ட முழக்கங்களையும் கேட்ட எந்த மரத்துப்போன தமிழனும் நிச்சயம் துடித்தெழுந்திருப்பான் என்பதிலே அய்யமில்லை!

வஞ்சக சிங்களத்தின் வாலையொட்ட நறுக்கிட வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடி- விடுதலை தமிழீழம் காணக் களத்தில் நிற்கும் தளபதி பிரபாகரனின் துப்பாக்கி ஏந்திய கைகளும்-அந்த வீரத் தம்பியின் உறுதிமிக்க ஒளிபடைத்த கண்களும் கொண்ட 'கட் அவுட்'டுகள் கோழையையும் வீரனாக்கியிருக்கும்!

இனப்படுகொலைக்காளான என் இனிய உடன்பிறப்புக்களின் பிணங்களின் மீது ஏறிச்சென்றுகொலைவெறியன் ஜெயவர்த்தனேயுடன் பேசுவதற்குயாராவது எண்ணியிருந்தால், அந்த எண்ணம், மதுரை மாநாட்டிலே ஏற்பட்ட தெளிவின் காரணமாக அடியோடு மறைந்திருக்கும் என உறுதியோடு நம்புவோம்.

சுதந்திர இறைமை கொண்ட தமிழீழ சோசலிசக் குடியரசு! விடுதலைபெற்ற தமிழீழம்! உலக வரைபடத்தில் தமிழனுக்கென்றோர் நாடு உருவாகப் போவதற்கு உந்து சக்தியாக அமைந்துவிட்டது. தமிழீழ விடுதலை மாநாடு!

"விடுதலைப் புலிகளில் ஒரு வீர இளைஞரை கொண்டுதமிழீழ விடுதலை மாநாட்டு கொடியை ஏற்ற வைத்த தமிழர்தளபதி வீரமணிக்கு சிரந்தாழ்த்திவணங்குகிறேன்!

இதன் மூலம் தமிழீழ விடுதலைக் கொடியை- விடுதலை பெற்ற தமிழீழத்தில் ஏற்றப்போவது யார் என்பதையும் உலகுக்கு மறைமுகமாக எடுத்துக் காட்டிவிட்டார் தமிழர் தளபதி வீரமணி!

## என்னென்பேன்! என்னென்பேன்!!

சிந்தனையைத்தூண்டிவிட்டு-பேச்சுவார்த்தையில் சிக்கித்தடுமாறுவது ஈழத்தலைவர்கள்என்றுகூறப்படும் மிதவாதிகளுக்கு உலகத்தமிழினத்தின் ஒப்பற்றகாவலர் தலைவர் கலைஞர் கருணாநிதி தனக்கேயுரிய பண்போடும் உரிமையோடும் எடுத்துரைத்திட்ட எச்சரித்திட்ட காட்சியை என்னென்பேன்! என்னென்பேன்!

தன்மானத் தந்தை பெரியாரின் வழியில்-தனக்கேயுரிய தனிநடையில் யாரையும் புண்படுத்தாது சொல்லவேண்டிய கருத்தை சொல்லவேண்டிய முறையில் சொல்லவேண்டியவர்களுக்கு சொல்லிவைத்த தளபதி வீரமணியின் தனிப்பெரும் ஆற்றலை என்னென்பேன்! என்னென்பேன்!

அலையலையாக திரண்டு வந்து சமுத்திரமாகக் காட்சியளித்த உணர்ச்சிமயமான தமிழ்க்குலத்தின் பாசத்தையும், பற்றையும், இனமான விடுதலை உணர்வுகளையும் என்னென்பேன்! என்னென்பேன்!

தமிழீழத்தை ஆயுதப் போராட்டம் ஒன்றின் மூலமே வென்றடைய முடியும் என்பதைப் பிரகடனம் செய்துவிட்ட மதுரை மாநாடு-தமிழீழ விடுதலைப் படையின் தளபதி தம்பி பிரபாகரனே என்பதையும் அய்யந்திரிபற எடுத்துக்காட்டிவிட்டது.

விடுதலை பெற்ற தமிழீழத்தில் தம்பி பிரபாகரன் ஒரு சுரண்டலற்ற சமதர்ம ஆட்சியை நிறுவியே தீருவான்.

## ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது

மதுரையில் நடைபெற்ற தமிழீழவிடுதலைமாநாடு-

தமிழினத்தை நசுக்கும் சிங்கள ஆட்சியைநிச்சயம் நடு நடுங்க வைத்திருக்கும்!

இந்திய நடுவண் அரசையே ஒரு உலுக்கு உலுக்கி 'ஈழத்தமிழர்களின் உயிர்,உடமைப் பாதுகாப்புக்கு இந்திய அரசு எல்லாவித நடவடிக்கைகளையும் தொடர்ந்து மேற்கொள்ளும்' என்று இந்திரா அம்மையாரை சென்னையிலே பேசவைத்திருக்கிறதென்றால்-

இது தமிழீழ விடுதலை மாநாட்டுக்கு கைமேல் கிடைத்த உடன் வெற்றி!

தமிழீழ விடுதலை போராட்டத்திலே ஒரு திருப்புமய்யமாக அமைந்து, தமிழீழப்போராட்டத்தைத் தமிழ்நாடு தன்னுடைய போராட்டமாக ஏற்றுக்கொள்ளும்படிசெய்துவிட்டது -திராவிடர் கழகம் மதுரையில் கூட்டிய தமிழீழ விடுதலை மாநாடு!

வெற்றிக்கனியுடன் வீர முரசறைந்து 'விடுதலைப் பாசறை'யாக அமைந்துவிட்ட இம்மாநாட்டை இவ்வளவு துணிவோடும், தெளிவோடும், கட்டுப்பாட்டுணர்வோடும் நடத்திக்காட்டி, சிங்கள அரசுக்கு சிம்மசொப்பனமாக விளங்கும் எமது தமிழர் தளபதி வீரமணியை வாழ்த்துவோம்!

"கொலைவாளினை எடடா-மிகு
கொடியோர் செயலறவே!
குகைவாழ் ஒரு புலியே! உயர்
குணமேவிய தமி ா!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்